# වාර්ෂික වාර්තාව - 2022

# ஆண்டறிக்கை - 2022

# ANNUAL REPORT – 2022

**ජාතික ළමා ආරක්ෂක අධිකාරිය**

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

**National Child Protection Authority**

**කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகவலுப்படுத்துகை அமைச்சு

Ministry of Women, Child Affairs and Social Empowerment

# ஆண்டறிக்கை

# 2022

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

## செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

## 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| தொடர் இல. | பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலம் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திரு உதயகுமார அமரசிங்க | தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>(2021.11.22) | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், கங்கொடவில, நுகேகொடை |
| 02 | சட்டத்தரணி திருமதி சுஜாதா அழஹப்பெரும | பிரதித் தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>(2019.12.24 - 2021.07.15) | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி |
| 03 | டாக்டர் திருமதி சுவர்ணா விஜேதுங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2020.01.22 - 2021.07.15) | சிரேஷ்ட உளவியல் மருத்துவ நிபுணர் (சிறுவர் மற்றும் இளம்பருவ) ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, பொரளை, கொழும்பு 08 |
| 04 | திரு சுசந்த பாலபட்டபெந்தி | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2020.06.15) | மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சனாதிபதி சட்டத்தரணி, சட்ட மாஅதிபர் திணைக்களம், கொழும்பு 12 |
| 05 | திரு அஜித் ரோஹன | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2021.07.21) | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அலுவலகம்,<br>தென் மாகாணம் |
| 06 | திருமதி அசோக அலவத்த | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2021.07.21) | ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் |
| 07 | கலாநிதி பதித்ரா கொடமுன்னே | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2021.07.15 - 2022.07.28) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>களனி பல்கலைக் கழகம், களனி |
| 08 | கலாநிதி திரு கபில பண்டார | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2020.01.22 - 2021.07.15) | பீடாதிபதி, கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம், கொழும்பு 07 |
| 09 | திரு பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2020.10.19) | தொழில் ஆணையாளர் நாயகம் , தொழில் திணைக்களம், கொழும்பு 06 |
| 10 | திரு ஹேமால் கஸ்துரிஆரச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>(2020.10.29 - 2022.03.02) | பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு எச்.டபிள்யு. சுதீர நிலங்க விதான | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2021.08.09) | பிரதி ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், பத்தரமுல்லை |
| 12 | திரு எம்.எச்.ஜி. பண்டார | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2020.01.22) | மேலதிக செயலாளர் (நிருவாகம்) சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு, பத்தரமுல்ல |
| 13 | டாக்டர் திரு சேனக குணதிலக்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2020.01.22 - 2022.07.28) | சிறுவர் நோயியல் நிபுணர், மாவட்ட வைத்தியசாலை, பதுளை |
| 14 | டாக்டர் திரு அஜித் தென்னக்கோன் | பணிப்பாளர் சபை உறுப்பினர் 2022.07.28 | பிரதம நீதிமன்ற மருத்துவர் |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| தொடர் இல | சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலஎல்லையும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திரு என்.ஏ.கே. விஜேநாயக்க | சபை உறுப்பினர் (2020.06.12) | முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு |
| 02 | திருமதி ஏ.எம்.டி. சுமணசேன | சபை உறுப்பினர் (2020.05.26) | ஆணையாளர்,<br>சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு,<br>தொழில் திணைக்களம் |
| 03 | திரு கே.பி.என். தேவப்பிரிய | சபை உறுப்பினர் (2020.06.11) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), கல்வி அமைச்சு |
| 04 | திருமதி ரோஷினி ஹெட்டிகே | சபை உறுப்பினர் (2020.06.09) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்), நீதி அமைச்சு |
| 05 | திருமதி எம்.சீ.எஸ். தேவசுரேந்திர | சபை உறுப்பினர் (2020.05.26) | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)<br>தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| 06 | திருமதி வீ.சீ.டி. சில்வா | சபை உறுப்பினர் (2021.01.22) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), உள்ளூராட்சி அமைச்சு |
| 07 | டாக்டர் லால் பனாபிட்டிய | சபை உறுப்பினர் (2021.03.17) | பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு |
| 08 | திருமதி ஹசினி பல்லேவெல | சபை உறுப்பினர் (2020.05.20) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), பாதுகாப்பு அமைச்சு |
| 09 | திரு எம்.டி.ஜே.சீ. முரகே | சபை உறுப்பினர் (2022.10.13) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (போக்குவரத்து மற்றும் பாராளுமன்ற அலுவல்கள்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல |

| தொடர் இலக்கம் | உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு | 1 – 1 |
| 02 | அறிமுகம் | 2 - 3 |
| 03 | பிரதான பணிகள் | 3 – 5 |
| 04 | நிறுவன ஒழுங்கமைப்பு | 6 - 6 |
| 05 | 2022 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவன ஒழுங்கமைப்பு | 7 – 7 |
| 06 | 2022 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி மற்றும் வெற்றிடங்கள் | 7 – 9 |
| 07 | நிதிசார் மற்றும் நடவடிக்கைசார் செயலாற்றுகை பகுப்பாய்வு | 9 – 10 |
| | **அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2022** | |
| 08 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 11 – 11 |
| 09 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக, தேசிய வழிப்படுத்தல் குழு, மாகாண குழு, மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களை சுயாதீன தொழில்நுட்ப வட்டமாக தாபித்தல் மற்றும் நடாத்தல். | 11 – 11 |
| 10 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தல் | 11 – 11 |
| 11 | சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல் | 12 - 12 |
| 12 | பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் தேவைகளைக் கொண்டுள்ள சிறுவர்களை வரைபடமாக்கல் | 12 – 12 |
| 13 | தேசிய தரவு முறைமையை அபிவிருத்தி செய்தல் | 12 – 12 |
| 14 | சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் முன்னோ நிகழ்ச்சித்திட்டம் | 12 – 13 |
| 15 | பிரதேச மட்டத்தில் சமுதாயத்தில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய் யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 13 – 13 |
| 16 | பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 13 – 13 |
| 17 | சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய ''மாணவர் தூதுவர்'' தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 13 – 14 |
| 18 | பாடசாலைகளுக்கான சிறுவர் உளவியல் மற்றும் உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டம் - சீக்ஷா<br>(சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பெற்றோர், ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல்) | 14 – 14 |
| 19 | அனர்த்த அல்லது அவசர நிலைமைகளின் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவசர நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம் | 15 – 15 |
| 20 | ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷபிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களுக்கு கல்வி உதவிகளை பெற்றுக் கொடுத்தல் | 15 – 15 |
| 21 | தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் | 15 - 16 |

| | | |
|---|---|---|
| 22 | பட்டப் பின் மருத்துவப் படிப்பு நிறுவகத்தின் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 16 – 16 |
| 23 | பொலிஸ் அலுவலர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்களை “சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் தொகுப்பு மற்றும் கருவிகள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திடம் | 16 – 16 |
| 24 | பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்களின் நல்ல வாழ்வை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தப்படும் விசேட சமுதாய நிகழ்ச்சித்திட்டம் | 16 – 17 |
| 25 | சிறுவர் பாதுகாப்பு பற்றி ஊடக பிரச்சாரங்கள், தகவல், கல்வி மற்றும் தொடர்புசாதன கருவிகளின் வளர்ச்சி, தினக் கொண்டாட்டங்கள் மற்றும் நிகழ்வுகள், கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகள், NCPA உத்தியோகபூர்வ இணையத்தளம், பேஸ்புக், YouTube மற்றும் Twitter பேணிவருவது தொடர்பாக தொடர்புசாதன நிகழ்ச்சித்திட்டங்கள். | 17 – 19 |
| 26 | விசேட விசாரணைகள், விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றி ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றிய சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 19 – 19 |
| 27 | சிறுவர்களுக்கு சாதகமான முறையில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவுகளை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல் | 20 – 20 |
| 28 | 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 20 – 20 |
| 29 | சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் | 20 – 22 |
| 30 | தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை | 23 – 23 |
| 31 | தொழில்வல்லுனர்களுக்கு உளவியல் சமூக பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் IEC கருவிகள் போன்றவற்றை தயார் செய்தல் | 23 – 23 |
| 32 | விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 23 – 23 |
| 33 | புலம்பெயர் ஊழியர்களின் சிறுவர்களை சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 24 – 24 |
| 34 | சிறுவர் பாதுகாப்பு பற்றிய வள நூலகங்களை அபிவிருத்தி செய்தல் | 24 – 24 |
| 35 | சுனாமி பாதுகாவலர் பெற்றோர் அரவணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல். | 24 – 24 |
| 36 | தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 25 – 25 |
| 37 | சட்ட ரீதியான பணிகள் | 25 – 29 |
| 38 | விசேட பொலிஸ் விசாரணைகள் | 29 - 30 |
| 39 | வருடாந்த கணக்குகள் | 31 – 56 |
| 40 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 57 - 64 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான தேசிய கொள்கையை தயார் செய்யும் பணிக்கு மற்றும் சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்கு 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 ஆம் பிரிவுக்கு அமைய அதிகாரசபைக்கு உரித்தான பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் (அ) பிரிவின் பிரகாரம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் துறையிலுள்ள அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

சிறுவர் பகல் நேர அரவணைப்பு வசதிகள் பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்ததன் மூலம் இலங்கையிலுள்ள சகல பகல்நேர அரவணைப்பு நிலையங்களையும் உயர் தரத்தைக் கொண்டதாக பேணிவருவதை மேற்கொள்ள முடியும். இந்த ஆண்டில் சிறுவர் பகல் நேர அரவணைப்பு வசதிகள் பற்றிய தேசியக் கொள்கையின் வரைவு தயார் செய்யப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு சிறுவர் உடல்சார் தண்டனை தொடர்பாக மற்றும் சிறுவர் பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு தொடர்பாக தயார் செய்யப்பட்ட சட்டத் திருத்தங்களின் வரைவுகள் மீளாய்வு செய்யப்பட்டன.

2022 ஆம் ஆண்டிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தத் தேவையான தலையீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 10 நடாத்தப்பட்டன. பொதுவாக நோக்கும் போது 2022 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு செயலாற்றுகையை அடைந்துகொள்ள இயலுமாயிற்று என்பதைக் குறிப்பிட முடியும். இதற்கு பணிப்பாளர் சபையிடமும், நேர்வரிசை அமைச்சிடமிருந்தும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பதவியணியினரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பை உயர்வாக மதிக்கின்றேன்.

உதயகுமார அமரசிங்க

தவிசாளர்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# அறிமுகம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்துக் கொள்வதற்காக சிறுவர்களை விழிப்புணர்வூட்டுவதை பரந்தளவில் மேற்கொண்டுள்ளது. நாட்டில் வாழும் சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டிலும் செயற்பட்டது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ''ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்'' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மேற்படி காலப் பகுதியில் காணப்பட்ட சமூக நிலைமைகளை ஆராயும் போது, சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர் ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் சர்வதேச ரீதியில் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் ஆட்கடத்தில் அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆயுத மோதல்களின் போது சிறுவர்களை பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதை சர்வதேச குற்றச் செயலாக கருதுவதும் இனங்காணப்பட்டது. இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தி 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை

மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவது படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பணியொன்றான "சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை"க்கு 2019.10.29 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தத் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான குறித்த ஐந்து வருட திட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக 2022 ஆம் ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

### பிரதான செயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பணி பின்வருமாறாகும். (14 ஆம் பிரிவுக்கு அமைய)

(அ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

(உ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளல்.

(ஊ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

(எ) சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

(ஏ) சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

(ஐ) ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

(ஒ) குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

(ஔ) சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

(க) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

(ங) சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

(ச) சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும், மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.


(ஞ) சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

(ட) சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

(ண) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

(த) சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

# 2022 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



## 2022 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1. தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் அலுவலகம்
2. பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
3. நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
4. நிதிப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
   - 5.1 திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு
   - 5.2 தகவல் மற்றும் ஊடக அலகு
     - 5.2.1. நூலகம்
6. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
7. உளவியல் சமூக பிரிவு
8. சட்டப் பிரிவு
9. சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
   - 9.1 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை
   - 9.2 மத்திய ஆவணக்காப்பகம்
   - 9.3 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு
   - 9.4 இணையத்தளக் கண்காணிப்பு அலகு
10. உள்ளகக் கணக்காய்வு பிரிவு
11. விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

## 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி வெற்றிடங்கள்

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | 01 | - |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | - | 01 |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் (அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்) | MM - 1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 02 | 01 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 28 | உளவியல் சமூக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 29 | சைபர் குற்றச்செயல் பகுப்பாய்வாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 30 | சைபர் கண்காணிப்பு அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 31 | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 32 | சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர் | MA - 4 | 01 | - | 01 |
| 33 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 34 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 35 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 18 | 07 |
| 36 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 37 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 369 | 220 | 149 |
| 38 | பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 01 | - | - |
| 39 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 40 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 41 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 42 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 44 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 45 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 06 | - | 06 |
| 46 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 15 | 04 | 11 |
| 47 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 48 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 10 | 03 | 07 |
| 49 | இணையத்தள கண்காணிப்பு உதவியாளர் | MA - 3 | 02 | - | 02 |
| 50 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 51 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 10 | 02 | 08 |
| 52 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 06 | 09 |
| 53 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 01 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 54 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 19 | 13 |
| 55 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (சிங்களம்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 56 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (தமிழ்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 57 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (சிங்களம்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 58 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (தமிழ்) | MA – 1-1 | 10 | 01 | 09 |
| 59 | சாரதி | PL 3 | 07 | 05 | 02 |
| 60 | செய்தி கொண்டு செல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 61 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 01 | 02 |
| 62 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **618** | 330 | **288** |


## நிதிசார் மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை பகுப்பாய்வு


2022 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயலாற்றுகையானது 03 செயற்றிட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

01. தேசிய அபிவிருத்திச் செயற்றிடடம் (ரூ.மி. 40.000)
02. 1929 சிறுவர் உதவி 24 மணி நேரத் தொலைபேசிச் சேவை தொடர்பான செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 10.692.)
03. சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டம் (ரூ.மி. 4.000)

என்ற வகையில் நிதி ஏற்பாடுகள் மேற்படி 03 செயற்றிட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தேசிய அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாக விடுவிக்கப்பட்டுள்ள மொத்த கட்டுநிதி - ரூ.மி. 32.420 ஆகும். அதற்கமைய தேசிய அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பான உண்மையான நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 25.726 ஆகும்.


தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் பற்றிய பகுப்பாய்வு
3.941
25.726
40.000
32.420
ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)
விடுவிக்கப்பட்ட கட்டுநிதி (ரூபா மில்லியன்)
உண்மை நிதிசார் முன்னேற்றம் (ரூபா மில்லியன்)
தீர்க்கப்படாத முற்பணத் தொகை (ரூபா மில்லியன்)


2022 - தேசிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் நிதிசார் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்தல்
20
15
10
5
0
19.175
10.629
5.625
3.620
5.500
3.519
3.700
1.258
1.500
0.539
2.000
1.462
2.500
4.699
நிகழ்ச்சிகள்
திட்டமிடல் மற்றும் தகவல்
நிருவாகம் மற்றும் மனித வளம்
உளவியல் சமூகம்
சட்டம்
சட்டத்தை அமுல்படுத்தல்
சட்டம், சட்ட அமுல்படுத்தல் மற்றும் விசேட பொலிஸ் விசாரணை பிரிவு
வருடாந்த நிதி ஒதுக்கம் (ரூபா மில்லியன்)
வருடாந்த நிதி முன்னேற்றம் (ரூபா மில்லியன்)

## அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2022

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மட்டத்தில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் சிறுவர் அலுவல் வெளிக்கள அலுவலர்களுக்கு கூட்டு அணுகுமுறைகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கைக்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல், விரிவுரைகளுக்கு பயிற்றுவிப்பாளர் குழுமத்தை தயார் செய்து முடிக்கப்பட்டது. மேற்படி வளவாளர் அலுவலர்களுக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி TOT நிகழ்ச்சித்திட்டங்கள் 03 நடாத்தப்பட்டதுடன், அதில் பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை 96 பேர் ஆவார்கள்.

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக, தேசிய வழிப்படுத்தல் குழு, மாகாண குழு, மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களை சுயாதீன தொழில்நுட்ப வட்டமாக தாபித்தல் மற்றும் நடாத்தல்.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக ஐந்து வருட செயற்றிட்டம் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் 2022.10.25 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான ஐந்து வருட செயற்றிட்டத்தின் அடுத்த கட்டப் பணிகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து வருட செயற்றிட்டம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தல்

நீதிமன்ற செயன்முறையுடன் சம்பந்தப்படுகின்ற சிறுவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை தீர்த்து வைக்கும் முறையியல்கள் பற்றிக் காணப்படுகின்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்பபட வேண்டிய 5 துறைகள் இனங்காணப்பட்டன. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு சிறுவர் உடல்சார் தண்டனை மற்றும் சிறுவர் பெற்றோர் பாதுகாவலர் தொடர்பில் தயார் செய்யப்பட்ட சட்டங்களை திருத்தம் செய்வதற்கான சட்டத் திருத்த வரைவுகளை மீளாய்வு செய்யும் 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தக் குழுக்கள் நிபுணர் குழுவை உள்ளடக்கியிருந்தது. பொலிஸ் அலுவலர்கள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுலவர்களுக்கு சிறுவர்களின் வீடியோ சாட்சியங்களை பெற்றுக் கொள்வதற்காக நேர்முகக் கலந்துரையாடல் நடாத்துவோரை பயிற்றுவிக்கும் இரண்டு நாள் செயலமர்வு அலுவலர்கள் 63 பேருக்காக நடாத்தப்பட்டது.

## சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.

சிறுவர் பகல்நேர அரணைப்பு வசதிகள் பற்றிய தேசிய கொள்கையினை தயார் செய்வதன் மூலம் இலங்கையிலுள்ள சகல பகல்நேர பராமரிப்பு நிலையங்களையும் உயர் தரத்தைக் கொண்டதாக பேணிவருவது இதன் நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டு இது தொடர்பில் 8 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சிறுவர் பகல்நேர பராமரிப்பு வசதிகள் பற்றிய தேசிய கொள்கை நேர் வரிசை அமைச்சினால் நிதி அமைச்சின் சிபாரிசுகள் மற்றும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் தேவைகளைக் கொண்ட சிறுவர்களை வரைபடமாக்கல்

அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்கள் பற்றிய வரைபடமாக்கல் விடயம் தொடர்பான முன்னோடிக் கருத்திட்டமொன்று களுத்துறை மாவட்டத்தில் அமுல்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் பொல்கொட்டுவ மற்றும் புபலலந்த ஆகிய கிராம அலுவலா் பிரிவுகள் இரண்டிலும் அலுவலா்கள் 12 பேருக்கு அச்சுறுத்தலைக் கொண்டுள்ள சிறுவர்களை வரைபடமாக்கல் பற்றிய ஒன்லையின் கேள்விக்கொத்துக்களை பூர்த்தி செய்வது எவ்வாறு என்பது பற்றிய கலந்துரையாடல் மற்றும் ஆரம்பப் பயிற்சி வழங்கப்பட்டது.

## தேசிய தரவு முறைமையை அபிவிருத்தி செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தகவல்கள், வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்தல் தொடர்பான தகவல்கள், பொலிஸ் நிலையங்களுக்கு அறிக்கையிடப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய தேசிய தரவு முறைமை தயார் செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு தேசிய தரவு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் அது தொடர்பிலான மேம்படுத்தல்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டன. முன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் (Pre Test) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை தடுப்பதற்காக மற்றும் சமய வழிபாட்டுத்தளங்களில் சிறுவர்களுக்கு இடம்பெறக்கூடியதான சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பதற்கு முறையான முறையியல் ஒன்றை தாபிப்பதாகும். 2022 ஆம் ஆண்டில் அநுராதபுரம், கண்டி, குருநாகல், கம்பஹா, வவுனியா, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய 07 மாவட்டங்களில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 436 பேர் ஆவார்கள்.

## பிரதேச மட்டத்தில் சமுதாயத்தினர் மத்தியில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக முறையான முறையியல் ஒன்றைத் தாபிப்பதாகும். 2022 ஆம் ஆண்டு இதன் கீழ் 108 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

## பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை "சுரெகும் பவ்வ" தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது கட்டாயக் கல்வி உரிமையை உறுதி செய்து மேற்படி சிறுவர்கள் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதிலிருந்து தடுத்துக் கொள்ளத் தேவையான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இதன் போது 2011/17 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய கல்வி அமைச்சுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. 2022 இல் இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் 83 பேர் கலந்துகொண்டார்கள். 2022 ஆம் ஆண்டு பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் 1035 தாபிக்கப்பட்டன.

## பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான "மாணவர் தூதுவர்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

சிரேஷ்ட மாணவர் தலைவர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு ரீதியாக அபிவிருத்தி செய்வதன் மூலம் சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலை சூழலை உருவாக்குவதற்காக ஆக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். இலங்கையில் அரச, பகுதியளவிலான அரச, பிரிவென், தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளின் மாணவர் தலைவர்கள், மாணவர் தலைவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை முன்னிலைப்படுத்திக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கல்வி

அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் 611 பாடசாலைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்துள்ளதுடன், முதற் கட்டமாக அதிபர்கள் மற்றும் மாணவர் தலைவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 7 மாகாண நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





## பாடசாலைகளுக்கு சிறுவர் உளவியல் மற்றும் உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டம் (சீக்ஷா - சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றி பெற்றோர் ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டல்)

“சீக்ஷா” கையேட்டைப் பயன்படுத்தி சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பில் ஆரம்பத் தரங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை பயிற்றுவிப்பது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2022 ஆம் ஆண்டு “சிறுவர் நிதியம்” “Child Fund” வெளிக்கள பதவியணியினர் மற்றும் பங்குதாரர்களான அமைப்புக்களினால் பெற்றோருக்கு சாதகமான ஒழுக்கக் கட்டுப்பாட்டு பற்றிய விரிவுரையொன்று 2022 பெப்ருவரி 24 ஆம் திகதி தம்புளையில் நடாத்தப்பட்டது. சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள். இரண்டாம் கட்டமாக மாவட்ட அலுவலார்களினால் 04 மாகாணங்களில் (சப்றகமுவ, மத்திய, வடக்கு மற்றும் வட மத்தி) பிரதேச அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.





## திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு அவசர நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பு மற்றும் நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்கான தகுந்த சிறுவர் பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். மேலும் சிறுவர்களுக்கு அவசர நிவாரணங்களை செய்துகொடுப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் 25 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டன.

## ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷபிரயோகங்களுக்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவிகளை செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் துஷ்பிரயோகம், பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாதுகாப்பற்ற, அச்சுறுத்தல் நிலையிலுள்ள மற்றும் கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்களின் கல்வி உரிமைகளை பாதுகாப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய மேற்படி கல்வி உதவி மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு சிறுவர்கள் 417 பேருக்கு கல்வி உதவி வழங்கப்பட்டது. சிறுவர்கள் 231 பேருக்கு ஒருவருக்கு ரூபா 4000 வீதமான ஏற்பாடுகளும், சிறுவர்கள் 186 பேருக்கு ரூபா 6000 வீதமான ஏற்பாடுகள் வழங்கப்பட்டன.

## தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் (14) (க) பிரிவுக்கமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சகல சமய மற்றும் அறக்கட்டளை நிலையங்களையும் கண்காணிப்புச் செய்வதும் ஒழுங்குறுத்துவதும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச அலுவலர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்துவதை திட்டமிடுவத்றகு மத்திய, வட மத்திய, வட, தென், சப்றகமுவ, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களின் நன்னடத்தை ஆணையாளர்கள் உட்பட நன்னடத்தை அலுவலர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் 280 பேருடன் ஏழு (07) கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்கள் தொடர்பாக உளவியல் சமூக மதிப்பீடுகளை மேற்கொள்வது பற்றிய பயிற்சி அமர்வு இந்த மாகாணங்கள் தொடர்பான அலுவலர்களுக்கு ஒன்லையின் முறையில்

நடாத்தப்பட்டது. இதில் அலுவலர்கள் 133 பேர் பங்கேற்றார்கள். 2022 ஆம் ஆண்டில் தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 313 கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் செய்யப்பட்டது.

## பட்டப் பின் மருத்துவப் படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மற்றும் அவற்றைத் தடுப்பது தொடர்பில் பல்வேறு தலையீடுகளை மேற்கொள்ளும் விடயத்தில் மருத்துவர்கள் பாரியதொரு செயற்பணியை நிறைவேற்றி வருகின்றார்கள். மேற்படி செயற்பணியை மென்மேலும் பலப்படுத்துவதற்காக மருத்துவர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. 2022 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பட்டப் பின் படிப்பு

மருத்துவ நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்கள் முப்பது (30) பேருக்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2 ஒன்லையின் முறையில் நடாத்தப்பட்டன.

## பொலிஸ் அலுவலர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலர்களை “சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சி பாடவிதானம், கற்றல் நடவடிக்கைத்தொகுப்பு மற்றும் கருவிகளின் வழிகாட்டல்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டல்” நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது சிறுவர் ஆட்கடத்தலை இனங்கண்டு அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்கான பயிற்சிப் பாடவிதானம், கற்றல் தொகுப்பு மற்றும் கருவிகள் வழிகாட்டல்கள் தொடர்பாக அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் போது சிறுவர்களுக்கு சாதகமானவாறு நடவடிக்கை மேற்கொள்ள வழிகாட்டுவதாகும்.

2022 ஆம் ஆண்டில் களுத்துறை, குருநாகல், கிளிநொச்சி, காலி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 471 ஆகும்.

## பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தப்படும் விசேட சமுதாய நிகழ்ச்சித்திட்டம்

பெருந்தோட்டத்துறையைச் சூழ வாழ்ந்து வருகின்ற குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து, அங்கு வாழும் சிறுவர்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை இனங்கண்டு சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களாக மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபடும் உணர்வுப்பூர்வமான அலுவலர்களை தோட்டத்துறையில் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டில

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 25 நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 928 ஆகும்.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஊடக நடவடிக்கைகள், தகவல்கள், கல்வி மற்றும் தொடர்புசாதன கருவிகள் அபிவிருத்தி, தினங்களைக் கொண்டாடுதல் மற்றும் சம்பவங்கள், கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள், தே.சி.பா.அ.சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம், முகப்புத்தகம், யூரியுப் மற்றும் ரிவிட்டர் என்பவற்றை பேணிவருவது தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி, சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் ஆகிய ஆகிய விடயப்பரப்புக்கள் பற்றி சிறுவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோர், பொது மக்கள், அலுலவர்கள், தொழில்வல்லுனர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், அரச மற்றும் தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவன அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் போது செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல், கல்வி, தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை வடிவமைத்தல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை தொடர்பில் நாளாந்த செய்திப்

பத்திரிகைகளை ஒழுங்குறுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 11 செய்தி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டதுடன், சிறுவர் பாதுகாப்பு, உரிமைகள், சட்டம், உளவியல் சமூக உதவிகள், சைபர் குற்றச் செயல்கள் மற்றும் சமகால அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பில் தாக்கம் செலுத்தும் பல்வேறு தலைப்புக்களின் ஊடாக தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஊடகவியலாளர் மாநாடுகள் 66 இற்கு வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ யுரியுப் செனல் மற்றும் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் / உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்கு ஊடாகவும் ( Subscribers - 1.43K /followers 7.7 K) வெளியிடப்பட்டது.







சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை பற்றி அறிக்கையிடுவது தொடர்பாக நாளாந்த பத்திரிகைகளை ஒழுங்குறுத்தல் மற்றும் தே.சி.பா. அதிகாரசபை அலுவலர்களுக்கு மத்தியில் இவை விநியோகிக்கப்பட்டன. சகல மாவட்டங்களுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு

அதிகாரசபையினால் அச்சிடப்பட்ட வெளியீடுகள் விநியோகிக்கப்பட்டதுடன், ஆட்கள் 91 பேருக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகள் 3 நடாத்தப்பட்டன.




தெஹிவளை எஸ். டி எஸ் ஜயசிங்க மைதானம்




தேசிய ரூபவாஹினி வளவு

2022 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சித்துவிலி சித்தம் எனும் அகில இலங்கை சித்திரம், சுவரொட்டி மற்றும் கார்டூன் போட்டியில் வெற்றியீட்டியவர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் வெற்றியாளர்கள் 55 பேரும் மாவட்ட மட்டத்தில் 737 பேருமாக ஒட்டுமொத்தமாக வெற்றியாளர்கள் 792 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள்.





முதலாம் இடம்
தொகுதி 08 – சுவரொட்டி
அகில இலங்கை வெற்றியாளர்





முதலாம் இடம்
தொகுதி 09 – சுவரொட்டி
அகில இலங்கை வெற்றியாளர்



மூன்றாம் இடம்
தொகுதி 10 – சுவரொட்டி
அகில இலங்கை வெற்றியாளர்



முதலாம் இடம்
தொகுதி 05 – சித்திரம்
அகில இலங்கை வெற்றியாளர்



முதலாம் இடம்
தொகுதி 05 – சித்திரம்
அகில இலங்கை வெற்றியாளர்

**விசேட விசாரணை, விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் தொடர்பான சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சிறுவர் துஷ்பிரயோகங்களிலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு அரவணைப்புச் செய்துகொடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். அதற்காக சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் பிரிவு நீதிமன்றங்களில் ஆஜராகும் சந்தர்ப்பங்கள் 2658 ஐ பூர்த்தி செய்துள்ளது. (மேல் நீதிமன்றம் 1173, நீதவான் நீதிமன்றம் 1665) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டப் பிரிவினால் நீதிமன்றத்தில் ஆஜராவது 41 உம் 1386 பேருக்கு சட்ட உதவி வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைதந்து மற்றும் தொலைபேசி மூலமாக சைபர் கண்காணிப்பு முறைப்பாடுகள் 170 கிடைத்துள்ளன.

## சிறுவர்களுக்கு சாதகமான முறையில் வீடியோ வாக்குமூலங்களை ஒளிப்பதிவு செய்யும் அலகுகளை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல்.

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள் இரண்டாவது தடவையும் பாதிக்கப்படுவதை தடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார தலைமையகம் மற்றும் வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலையில் (ராகம) சிறுவர் இல்ல வளவில் புதிய சிறுவர்களுக்கு சாதகமான வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு மூலம் சிறுவர்களின் சாட்சியங்கள் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு 197 வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வது நிறைவு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவின் பேரில் சாட்சியங்களின் ஒளிப்பதிவு இறுவட்டுக்கள் 144 வெளியிடப்பட்டுள்ளதுடன், தட்டெழுத்துப் பிரதிகள் 213 வெளியிடப்பட்டுள்ளன. வீடியோ சாட்சியங்களை பெற்றுக் கொடுப்பதற்காக மேல் நீதிமன்றங்களில் ஆஜராவது 60 உம் மேற்கொள்ளப்பட்டது.

## 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் உடல்சார், உளவியல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாரபட்சம் காட்டல், சைபர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது 24 மணி நேரம் முழுவதிலும், 365 நாட்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு 1929 சிறுவர் உதவித் தொலைபேசி சேவைக்கு 9574 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு 115,768 அழைப்புக்கள் கிடைத்துள்ளன.

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல்வேறு விதமாகக் கிடைக்கின்றன. மேற்படி முறைகள் பின்வருமாறாகும்.

01. 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
02. அதிகாரசபைக்கு நேரடியாக வருகை தந்து வாய் மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.
03. கடிதங்கள், பெக்ஸ் மின்னஞ்சல் மூலம் கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
04. சைபர் வழிமுறையில் கிடைக்கின்ற தகவல்கள்
05. பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள்

இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அனைத்துக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ள ஒட்டுமொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 10,497 ஆகும்.




| தொடர் இல. | தவறின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் விகிதம் |
|---|---|---|
| 1 | ஆபாச வெளியீடுகள் - 286 (அ) த.ச.கே. | **7** |
| | | 0.1% |
| 2 | பிச்சை எடுக்கச் செய்தல் - 288 த.ச.கே. | **249** |
| | | 2.4% |
| 3 | சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் பயன்களை பெறுதல் - 360 (ஆ) த.ச.கே. | **25** |
| | | 0.2% |
| 4 | போதைவஸ்துக் கடத்தலுக்கு பிள்ளைகளை பயன்படுத்தல் - 288(ஆ) த.ச.கே. | **41** |
| | | 0.4% |
| 5 | பிள்ளைகளுக்கு எதிரான கொடூரத்தன்மை - 308 (அ) த.ச.கே. | **2096** |
| | | 20.0% |
| 6 | பாலியல் துன்புறுத்தல் - 345 த.ச.கே. | **729** |
| | | 6.9% |
| 7 | | **131** |

| | | | |
|---|---|---|---|
| | சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து கடத்தல்- 352.த.ச.கே. | | 1.2% |
| 8 | கடத்திச் செல்லல் - 353 த.ச.கே. | **171** | 1.6% |
| 9 | சிறுவர்களை வியாபாரம் செய்தல்- 360 (இ) த.ச.கே. | **132** | 1.3% |
| 10 | வன்புணர்தல்- 363 த.ச.கே. | **167** | 1.6% |
| 11 | முறைதகாப் புணர்ச்சி - 364 (அ) த.ச.கே. | **1** | 0.0% |
| 12 | கடும் பாலியல் துஷ்பிரயோகம்- 365 (ஆ) த.ச.கே. | **185** | 1.8% |
| 13 | கடத்தல்காரராக பிள்ளைகளை ஈடுபடுத்தல் - 360 (அ) த.ச.கே. | **0** | 0.0% |
| 14 | இயற்கைக்கு முரணான பாலியல் தவறுகள்- 365 (அ) த.ச.கே. | **0** | 0.0% |
| 15 | குழந்தைகள் புறக்கணிப்பு - 71. CYPO | **2005** | 19.1% |
| 16 | சிறுவர் ஊழியம் - 56 இன் 47 ஆம் இலக்க சட்டம் | **214** | 2.0% |
| 17 | கட்டாயக் கல்வி – 1939 கல்விக் கட்டளைச் சட்டம் | **1231** | 11.7% |
| 18 | குடும்ப வன்முறை – 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை சட்டம் | **82** | 0.8% |
| 19 | சிறுவர் தவறாளிகள் - CYPO | **229** | 2.2% |
| 20 | வேறு | **2802** | 26.7% |
| | ***மொத்தம்*** | **10497** | 100.0% |

### தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை குறைத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான அச்சுறுத்தலைத் தடுத்தல், கல்வி மற்றும் உடல், உள சுகாதாரத்தை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் சிறுவர் மைய உளவியல் சமூக உதவிகள் சிறுவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றனது. இந்த சேவை மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்கள் 828 பேருக்கு உளவியல் சமூக தலையீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. உளவியல் சமூக உதவிகள் சிறுவர்கள் 117 பேருக்கு வழங்கப்பட்டதுடன் சிறுவர்கள் தொடர்பான பின்னாய்வுகள் 647 மேற்கொள்ளப்பட்டன. வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்கு சிறுவர்கள் 36 பேர் ஆயத்தப்படுத்தப்பட்டார்கள். வீடியோ சாட்சியமளிக்க வருகை தந்த ஆண் பிள்ளைகள் 9 பேருக்கு உளவியல் சமூக உதவிகள் வழங்கப்பட்டன. வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்ய வருகைதந்திருந்த சிறுவர்கள் 33 பேருக்கு கல்வி உதவிகள் வழங்கப்பட்டன.

### தொழில்வல்லுனர்களுக்கு உளவியல் சமூக பயிற்சிகளை வழங்குதல் மற்றும் IEC கருவிகள் போன்றவற்றை தயார் செய்தல்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் தொழில்வல்லுனர்களின் அறிவை இற்றைப்படுத்தி பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் மீட்டெடுத்தல் இதன் முக்கிய நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டு சிறுவர் துஷ்பிரயோக மீட்பு பாடநெறி ( Child Abuse Recovery Curriculum ) தொடர்பாக தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. தே.சி.பா. அதிகாரசபை அலுவலர்களுக்கு உளவியல் சமூக உதவிகளை வழங்குவதற்காக கீட் பைகள் கொள்வனவு செய்யப்பட்டன. தே.சி.பா.அதிகாரசபை உளவியல் சமூக அலுவலர்களுக்கு மீள்இணைத்தல் பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவிக்கும் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. கிட் பைகள் 07 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. ராகம வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் கலையகத்திற்கும் கிட் பை வழங்கப்பட்டது.

### விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களில் சிறுவர்களுக்கு இடம்பெறக்கூடிய சகல வகையிலுமான துஷ்பிரயோங்களிலிருந்தும் சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அந்நிறுவனங்களின் தலைவர்களை ஆரம்பத்தில் விழிப்புணர்வூட்டிய பின்னர் முறையான முறையியல் ஒன்றை தாபிப்பது இதன் நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டில் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 703 ஆகும்.

## புலம்பெயர் ஊழியர்களின் சிறுவர்கள் சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

புலம்பெயர் உழியர்களின் சிறுவர்களை சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக குடும்ப சந்திப்பு தொழில்நுட்ப கருவியை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருவி NISD இன் பணிப்பாளருடன் முதலாவது கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், பின்னர் இந்த நிகழ்ச்சித்திட்டம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட உளவியல் சமூக அலுவலர் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் பயிற்சியாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அபிவிருத்தி அலுவலர்களுடன் நடாத்த திட்டமிடப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு பற்றிய வள நூலகங்களை அபிவிருத்தி செய்தல்

உச்சளவான தரத்தைக் கொண்டுள்ள தகவல் சேவைகள் மற்றும் தகவல் மூலங்களைப் பெற்றுக் கொடுத்து சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஆராய்ச்சிகளுக்கு உதவி வழங்குவது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிறுவன அலுவலர்களின் வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும். சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் அபிவிருத்தி, சட்டம், உளவியல், சிறுவர் உரிமைகள் போன்ற பல்வேறு முன்னோடி துறைகள் சம்பந்தமான அறிவை வளர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூலகம் பல்வேறு சிறுவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பல்வேறு நூலகங்களை பரிசீலிப்பவர்கள் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்துகின்றார்கள். 2022 ஆம் ஆண்டில் புத்தகங்களை வாசிப்பாளர்கள் 200 பேர் இதனை பயன்படுத்தியுள்ளார்கள். 124 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 04 கப்பட்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

## சுனாமி பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கல்வி உதவியாக மாதாந்தம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாவலர் அந்தஸ்தை பரிசோதனை செய்து சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக இணைத்துக் கொள்ளக்கூடிய பாதுகாவலர் மற்றும் அரவணைப்பை சிபாரிசு செய்தல் மற்றும் சகலருக்கும் கல்வி எனும் நிலைபேறான தொணிப்பொருளின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள, ஒரங்கட்டப்பட்ட மற்றும் அநாதரவாக உள்ள சிறுவர்களுக்கு கல்வி வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் அவர்களின் கல்வி உரிமைகளை பாதுகாப்பது இதன் முக்கிய நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டில் சிறுவர்கள் 25 பேருக்கு க்வி உதவி வழங்கப்பட்டது. மாவட்ட சுனாமி பாதுகாவலர் அரவணைப்பு சபை அம்பாளை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம்

2011 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தை முறைப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு வழிகாட்டல் தொகுப்பொன்று தயார் செய்யப்பட்டு 219/05 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் சகல வகையிலும் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு அவசியமாகின்ற சிறுவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக நிதி உதவி பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சட்ட ரீதியான பணிகள்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பணிகளுக்கு மேலதிகமாக பின்வரும் சட்டங்கள் தொடர்பிலும் அதிகாரசபையின் சட்டப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- 2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டம்

2007 இன் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் சட்டத்தின் ஏற்பாடுகளை மையமாகக் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பிள்ளையின் உச்சளவான நலனுக்காக நடவடிக்கை மேற்கொள்வதை மேம்படுத்துவதன் மூலம் பிள்ளையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அதிகாரசபையின் சட்டப் பிரிவின் பணிகளாவன,

- சிறுவர் பாதுகாப்புக்கான தடுத்தல் பொறிமுறை மற்றும்
- பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொறிமுறை

என்ற வகையில் வகைப்படுத்தப்பட முடியும்.

## சட்டப் பணிகள்

➢ சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

  - பௌத்த அலுவல்கள் பற்றிய திணைக்களம் - 11
  - முஸ்லிம் சமய அலுவல்கள் பற்றிய திணைக்களம் - 1
  - பொலிஸ் திணைக்களம் - 2
  - வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை – 1
  - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் - 12

- கல்வி அமைச்சு – 17

➢ சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் தேசிய கொள்கையை விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்தத் தேவையான சட்டரீதியான, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

- நீதிமன்றச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட சிறுவர்கள் முகம்கொடுக்கின்ற சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கான முறையியல்கள் பற்றி சிறுவர்கள் தொடர்பில் காணப்படுகின்ற சட்டங்களில் திருத்தம் செய்ய வேண்டிய துறைகளை இனங்கண்டு விசேட சபையொன்றை உள்ளடக்கிய குழுக்களை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் சிறுவர் உடல்சார் தண்டனை மற்றும் சிறுவர் பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு தொடர்பான சட்டக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்த வரைவுகளை மீளாய்வு செய்யும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

➢ சிறுவர் பாதுகாப்பு பற்றிய சமவாயங்கள், கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு வசதிகளை செய்துகொடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

➢ சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் அழுத்தம் கொடுப்பதை ஏற்படுத்தல்.

➢ சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை அரசின் சர்வதேச கடப்பாடுகள் பற்றிய இறுதி அவதானிப்புக்களுக்கு மற்றும் சிபாரிசுகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வசதிகளை செய்துகொடுத்தல்.

1. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (UNCRC) மற்றும் அதன் விருப்பத்துக்குரிய அமைப்புகள் 2
2. பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான பாரபட்சம் காட்டல்களையும் ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW)
3. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCPR)
4. ஐக்கிய நாடுகளின் சர்வதேச திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான சமவாயம் (UNTOC)
5. ஐரோப்பிய சமூகத்தின் GSP ± சலுகை முறை

➢ சட்டம் மற்றும் பிள்ளை பற்றிய பாடசாலை பாடவிதானத்தை தயார் செய்வது தொடர்பில் வசதிகளை செய்தல்.

➢ சிறுவர் பாதுகாப்பு பற்றிய சிக்கல்கள் தொடர்பாக சட்ட ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

- 2022 ஆம் ஆண்டு தொலைபேசி மூலமாக சட்ட ரீதியான ஆலோசனை வழங்குதல் - 1315
- சட்டப் பிரிவுக்கு வருகை தந்துள்ள சேவை பெறுநர்களுக்கு சட்டரீதியான ஆலோசனை வழங்குதல் - 58

➢ துஷ்பிரயோகத்திற்கு ஆளான ஆட்கள், சுனாமியால் பரிதக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆலோசனை மற்றும் சடட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுவர் ஊழியம் சம்பந்தமான செயற்பாடுகளின் போது சட்ட உதவி வழங்குதல் மற்றும் உரிய ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

➢ பின்வரும் சட்டங்களின் ஏற்பாடுகள் எதுவும் மீறப்படுவதன் மூலம் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை வழிப்படுத்தல்.

- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்துவது பற்றிய சட்டம்
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டம்
- கல்விக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டாயக் கல்வி சம்பந்தமான கட்டளைகள்

### 2022 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை வழிப்படுத்தல்

- 1929 ஊடாக சட்டப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 3020
- 2011 – 2021 இடையே அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய பின்னாய்வுகளின் எண்ணிக்கை - 552
- 2011 – 2021 வரையான காலப்பகுதி தொடர்பாக நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக் கோப்புகளின் எண்ணிக்கை - 1140
- 2022 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளில் 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 1052

### ➢ சட்டரீதியான விடயங்களின் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை பிரதிநிதித்துவம் செய்தல்

- நீதிமன்றம் - நீதவான நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம்
- ஆணைக்குழுக்கள் - மனித உரிமைகள் ஆணைக்குழு, தகவல் அறியும் ஆணைக்குழு, பத்திரிகை ஆணைக்குழு
- தொழில் நியாய சபை

**2022 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் ஆஜரான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை**

| தொடர் இல. | நீதிமன்றம் | நீதிமன்றங்களில் ஆஜரான எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பத்தரமுல்ல சிறுவர் நீதவான் நீதிமன்றம் | 25 |
| 2 | மஹர நீதவான் நீதிமன்றம் | 02 |
| 3 | ஹோமாகம நீதவான் நீதிமன்றம் | 02 |
| 4 | கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் | 02 |
| 5 | தம்புளை நீதவான் நீதிமன்றம் | 01 |
| 6 | கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 01 |
| 7 | மினுவங்கொட நீதவான் நீதிமன்றம் | 04 |
| 8 | கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | 02 |
| 9 | மேன்முறையீட்டு நீதிமன்றம் | 02 |
| **மொத்தம்** | | **41** |

➢ சிறுவர்கள் பற்றி ஊடகங்களில் அறிக்கையிடுவதன் சட்டபூர்வமான தன்மை பற்றிய கண்காணிப்பு

- 2022 ஆண்டு சட்டபூர்வமான தன்மையை பரிசோதனை செய்தமை – 2433 மேற்கொள்ளப்பட்டது.
- சிக்கலான அல்லது சட்ட விரோத ஊடக அறிக்கையிடலை தடுப்பது பற்றி ஊடக நிறுவனங்களுக்கு சட்டரீதியான வழிகாட்டல்கள் 02 மேற்கொள்ளப்பட்டன.

➢ அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணை அலகினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட கோப்புக்களின் சட்டரீதியான தன்மை பற்றிய கண்காணிப்பு – 42

➢ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டரீதியான ஆவணங்களை தயார் செய்தல்

- புரிந்துணர்வு உடன்படிக்கைகள் - 13
- சட்டரீதியான ஆவணங்கள் - 90
- ஆவணங்களை தயார் செய்தல் - 1164

➢ சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய குற்றவியல் வழக்கு விசாரணைகளை கண்காணிப்புச் செய்தல்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(ஏ) பிரிவின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துவதற்கு அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மேல் நீதிமன்றங்களில் தற்போது காணப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் அனைத்தினதும் தகவல்களை சேகரித்து தரவு முறைமையில் தரவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

➢ வளவாளர்களாவதன் மூலம் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்கள் சார்ந்த சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்றன தொடர்பான அறிவு மற்றும் திறமைகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் விழிப்புணர்வூட்டலை மேற்கொள்ளல்.
➢ சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற பொது மக்களின் முறைப்பாடுகளில் கல்வி உதவித் தேவைகளைக் கொண்டுள்ள சிறுவர்கள் தொடர்பில் சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல் - 506

## விசேட பொலிஸ் விசாரணைகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு, 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக மற்றும் வேறு முறைகளில் கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு இயங்கி வருகின்றது.

## 2022 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய அறிக்கை

| தொடர் இல. | தவறு | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | விசாரணை செய்யப்பட்டு வரும் எண்ணிக்கை | விசாரணை பூர்த்தியடைந்த எண்ணிக்கை | பொய்யானவை | நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவை | நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட எண்ணிக்கை | வெளி பொலிஸ் நிலையங்களுக்கு விசாரணைக்காக |
|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | **சமர்ப்பிக்கப் பட்டவை** |
| 01 | சிறு தவறுகள் | 3 | - | 3 | - | 3 | 3 | - |
| 02 | பல்வேறு முறைப்பபாடுகள் | - | - | - | - | - | - | - |
| 03 | கடுமையயான தவறுகள் | 26 | 7 | 19 | - | 26 | 26 | - |
| **முழு மொத்தம்** | | **29** | **7** | **22** | - | **29** | **29** | - |

# இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (இ.தே.சி.பா.அ)

**டிசம்பர் 31 2022 உடன் முடிவடையும் நிதியாண்டுக்கான கணக்கீட்டு கொள்கைகள்**

**1. பொதுவான தகவல்கள்**

தே.சி.பா.அதிகாரசபையானது 1998ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இல. 330, தலவத்துகொட வீதி, மடிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர எனும் இடத்தில் அதனது பிரதான அலுவலகம் அமைந்துள்ளது.

**2. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்.**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்ட கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மாற்றமான கொள்கைகள் ஏதும் இருப்பின் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் நிதி நிலைமை கூற்று( ஐந்தொகை), நிதிச்செயலாற்றுகை ( வருமான அறிக்கை), பங்குகளில் மாற்றம் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

**3. தயாரிப்பிற்கான அடிப்படை**

நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 8 (அ) (xxvi) மற்றும் பிரிவு 42 (ஊ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய தே.சி.பா. அதிகாரசபை இலங்கையில் வரி செலுத்த வேண்டியதில்லை. நிதிக்கூற்றுக்கள் வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**<u>தே.சி.பா.அதிகார சபை கீழ்வரும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை (இ.பொ.து.க.நி) பின்பற்றியுள்ளது.</u>**

**இ.பொ.து.க.நி. 1 - நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல்.**

இந்த நியமம் நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் கடந்தகால நிதிக் கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவத்தும் வகையில் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தை குறிப்பிடுவதற்கானதாகும். இந்த குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு இந்த நியமம் நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதற்கான முழுமையான அக்கறை, அவற்றின் கட்டமைப்புக்கான

வழிகாட்டல், திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்திற்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள் என்பவற்றை வரையறை செய்துள்ளது. குறிப்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை அடையாளம் காணுதல், அளவிடுதல், வெளிப்படுத்தல் என்பவை வேறு இ.பொ.து.க.நியமங்களால் கையாளப்பட்டுள்ளது.

## இ.பொ.து.க.நி 2 - காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று என்பது காசுப்பாய்ச்சலுக்கான மூலங்கள், அறிக்கையிடும் காலப்பகுதியில் காசு செலவிடப்பட்ட பொருட்கள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான காசுமீதி என்பவற்றை அடையாளப்படுத்துகிறது. ஒரு நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் பற்றிய தகவல் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு பொறுப்பாண்மை, தீர்மானமெடுத்தல் நோக்கங்களுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயனளிக்கிறது.பொதுத்துறை நிறுவனமொன்று எவ்வாறு தனது செயல்பாடுகளுக்குத் தேவையான நிதியினை திரட்டுகிறது என்பதையும் குறித்த நிதி எந்த விதத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சல் கூற்று அனுமதிக்கிறது. நிறுவனத்தினுடைய செயல்பாடுகளின் நீடித்த தன்மை போன்ற வள ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அதனை மதிப்பீடு செய்வதற்கும் பயனாளிகளுக்கு காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் காலப்பகுதி மற்றும் அவற்றின் நிச்சயத்தன்மை என்பவை பற்றிய தெளிவு அவசியமாகிறது. இந்த நியமத்தின் குறிக்கோள் என்னவெனில், செயல்படுத்தல், முதலீடு செய்தல், நிதியளித்தல் நடவடிக்கைகள் முதலான காலப்பகுதியிலிருந்து காசுப்பாய்ச்சலை வகைப்படுத்தும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மூலம் ஒரு நிறுவனத்தின் காசு மற்றும் காசுக்குச் சமனானவையில் ஏற்படும் வரலாற்றுரீதியான மாற்றத்தைப் பற்றிய தகவல்களை வழங்குவதை தேவைப்படுத்துவதாகும்.

## இ.பொ.து.க.நி 3 - கணக்கட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்

இந்த நியமம் கணக்கீட்டு முறைமை மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்தல் மற்றும் தவறுகளைச் சரிசெய்தல் என்பவற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல், அவற்றை மாற்றுதல் என்பவற்றுக்கான பிரமாணங்களை குறிப்பிடுவதற்கானதாகும். ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பொருத்தப்பாட்டையும் நம்பகத்தன்மையையும் கடந்தகால நிதிக்

கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்லும் தன்மையையும் மேம்படுத்துவதனை இந்நியமம் நோக்காகக் கொண்டுள்ளது.

### 1. தேய்மானம்

காணி தேய்மானத்திற்கு உட்பட்டதல்ல. ஏனைய சொத்துக்களுக்கான தேய்மானம் மதிப்பிடப்பட்டுள்ள அவற்றின் பயனுள்ள வாழ்நாளுக்கு ஏற்ப அவற்றின் கிரயத்தை ஒதுக்கீடு செய்வதற்காக நேர் கோட்டு முறையைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆதனம், பொறி மற்றும் சாதனம் பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் போது அதனது தேய்மானம் ஆரம்பித்து அது ஐந்தொகையிலிருந்து நீக்கப்படும் வரை தொடரும்.

| | |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

குறித்த நன்கொடை முகவருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு இணங்க, கருத்திட்ட நிதியினைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட எந்தவொரு ஆதனம், பொறி மற்றும் சாதனத்தை தே.சி.பா.அதிகாரசபை உள்வாங்கவில்லை. கருத்திட்ட நிதியினூடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் சாதனம் நன்கொடை முகவருக்குச் சொந்தமானதாகும். அவற்றின் உடைமை தே.சி.பா.அதிகாரசபைக்கு மாற்றப்படும் வரை கருத்திட்டங்களுக்கான பிரத்தியேக சொத்துப் பதிவேடு பேணப்படுகிறது.

1. **கடன் தீர்ப்பு**

காணிக்கான கடன் தீர்ப்பு குத்தகைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏனைய சொத்துக்கள் தேய்மான வீதத்திற்கு சமமாக கீழ்வரும் வீதத்தில் கடன் தீர்ப்புக்கு உட்பட வேண்டும்.

| காணியின் விபரம் | குத்தகைக் காலம் (ஆண்டுகள்) |
|---|---|
| காணி (2000) | 50 |
| காணி (2016) | 30 |

| ஏனைய சொத்துக்கள் | கடன் தீர்ப்பு வீதம் |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

## **கணக்கீட்டு குறிப்புகள்**

### **குறிப்பு 01-: கடன் தீர்ப்பு**

குறித்த கிரயங்களை ஈடு செய்யும் நோக்கில் வழங்கப்பட்ட மானியங்களுடன் தொடர்புடைய கிரயங்களை நிறுவனம் செலவாக அங்கீகரிக்கும் காலம் முழுவதும் மானியங்கள் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளப்படுத்தப்படும்.

**குறிப்பு 02-: எதிர்பாராத பொறுப்பு**

அதிகாரசபையுடைய இடைநிறுத்தப்பட்ட ஒரு ஊழியர் தொடர்பில் எழும் சட்ட வழக்குகள் விடயத்தில் தே.சி.பா.அதிகாரசபை எதிர்பாராத பொறுப்பை கொண்டுள்ளது.

**குறிப்பு 03-: ஒத்திவைக்கப்பட்ட வருமானம்**

2022 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்களுக்கு எதிரான வருடாந்த மூலதன மானிய கடன் தீர்த்தல் பெறுமானம் ஒத்திவைக்கப்பட்ட வருமான கணக்கில் குறிப்பு 1 பீ இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு 04-: திரண்ட செலவுகள்**

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த திரண்ட செலவு 31.12.2023 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டுள்ள திரண்ட செலவுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது.

**குறிப்பு 05-: பணிக்கொடை ஒதுக்கீடு**

2022 ஆம் ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஊழியர்களுக்காக கணிப்பிடப்பட்டது.

**குறிப்பு 06-: இறுதிக் கையிருப்பு**

காகிதாதிகளின் இறுதிக் கையிருப்பு சராசரிக் கிரய அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

2022.12.31 **ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| விபரம் | குறிப்பு | ரூபா 2022 | ரூபா 2021 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டெழும் கொடை - திறைசேரி | | 274,380,000.00 | 249,600,000.00 |
| - ஏனைய நிறுவனங்கள் | 1A | 436,612.00 | 552,975.00 |
| - ஏனைய வருமானங்கள் | 1B | 18,399,836.87 | 17,306,116.83 |
| தேசிய செயற்றிட்டத்திற்கான திறைசேரியின் கொடை | | 31,027,255.90 | 24,300,000.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1C | 202,943.76 | 18,380.00 |
| **மொத்த வருமானம்** | | **324,446,648.53** | **291,777,471.83** |
| **செலவினம்** | | | |
| நிருவாகச் செலவினம் | 2 | 264,162,936.01 | 229,747,957.81 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 70,102,684.18 | 62,302,800.73 |
| கருத்திட்டச் செலவினம் | 4 | 436,612.00 | 552,975.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | - | - |
| நிதிச் செலவினம் | 6 | - | - |
| **மொத்த செலவினம்** | | **334,702,232.19** | **292,603,733.54** |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை)** | 7 | **(10,255,583.66)** | **(826,261.71)** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## 2022.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று

| | | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| விபரம் | குறிப்பு | 2022 | 2021 |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 190,748,784.93 | 91,926,688.40 |
| குத்தகைக் காணி | 8.1 | 18,591,742.11 | 19,370,783.21 |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 531,497.24 | 1,804,310.56 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 10 | 1,969,607.45 | - |
| | | **211,841,631.73** | **113,101,782.17** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு - எழுதுகருவி | | 961,545.39 | 847,118.77 |
| இடர் கடன் மீளச் செலுத்தல் | | - | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 10,426,783.25 | 9,048,548.64 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 640,803.89 | 543,062.95 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 6,190,966.96 | 15,613,666.58 |
| | | **18,220,099.49** | **26,523,131.08** |
| **மொத்த சொத்துக்கள்** | | **230,061,731.22** | **139,624,913.25** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | 66,134,780.00 | 59,270,622.50 |
| கருத்திட்ட கணக்குகளின் மிகை | 14-A | 1,456,238.27 | 1,868,850.27 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 14-B | 2,095,500.24 | 603,377.27 |
| | | **69,686,518.51** | **61,742,850.04** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நின்ற செலவினம் | 15 | 2,865,411.81 | 3,146,749.75 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 16 | 1,266,153.50 | 2,069,525.14 |
| | | **4,131,565.31** | **5,216,274.89** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **73,818,083.82** | **66,959,124.93** |
| **தேறிய சொத்துக்கள்** | | **156,243,647.40** | **72,665,788.32** |
| **நிதியீட்டல்** | | | |
| மூலதனக் கொடைகள் | 17 | 41,957,104.80 | 53,405,510.34 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 166,669,981.25 | 34,038,634.65 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | (52,383,438.65) | (14,778,356.67) |
| | | **156,243,647.40** | **72,665,788.32** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

## 2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக் கூற்று

| விபரம் | குறிப்பு | ரூபா 2022 | ரூபா 2021 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்தான மிகை/(குறை) | | (10,255,583.66) | (826,261.71) |
| **முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்** | | | |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்பு | | (2,528,957.51) | (21,386,079.17) |
| மூலதன கொடை | | (11,077.53) | 21,852,684.05 |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | |
| தேய்மானம் | 8 | 12,166,941.82 | 11,645,216.14 |
| குத்தகை காணி தேய்மானம் | 8.1 | 779,041.10 | 779,041.10 |
| அன்பளிப்புக்களின் மூலம் கிடைத்த நிலையான சொத்துக்கள் | | (6,199,100.00) | (7,882,665.28) |
| மீள் மதிப்பீடு செய்த நிலையான சொத்துக்கள் | | (83,832,231.70) | (33,683,917.00) |
| சொத்துக்கள் அகற்றல் தேய்மானம் | | (1,675,054.64) | (1,861,333.94) |
| மூலதனக் கொடை அன்பளிப்பு | | 2,663,600.00 | 7,882,665.28 |
| தேய்மானம் செய்த மூலதனக் கொடை | | (12,945,982.92) | (12,109,165.59) |
| தேய்மானம் செய்த கருத்திட்ட நிதியம் | | (436,612.00) | (1,911,310.06) |
| தேய்மானம் செய்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 83,829,147.45 | 33,316,393.55 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு / (குறைவு) | | (281,337.94) | (2,954,374.05) |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு / (குறைவு) | | (348,000.00) | (31,360.00) |
| இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | | (114,426.62) | 575,747.96 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | 1,299,352.99 | (4,601,482.54) |
| முன்செலுத்தல்கள் (அதிகரிப்பு / குறைவு) | | (97,740.94) | (21,214.38) |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 8,431,387.50 | 7,889,925.00 |
| பணிக்கொடை செலுத்தல் | | (1,551,867.50) | (2,471,543.00) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசோட்டம்** | | **(11,108,502.10)** | **(5,799,033.64)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (1,581,276.30) | (3,518,775.66) |
| நிலையான சொத்து அகற்றல் | | 1,689,216.41 | 1,913,765.74 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | (1,969,607.45) | 58,676.82 |
| முதலீட்டுப் பயன்கள் | | 1,272,813.32 | 4,026,687.38 |
| நிலையான வைப்பு அதிகரிப்பு | | (2,677,587.60) | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(3,266,441.62)** | **2,480,354.28** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| டேலி மிரர் சுனாமி அனுசரணை ஏற்பாடுகள் | 14 | 24,000.00 | 1,024,000.00 |
| மூலதனக் கொடை பெறுகை | 17 | 4,928,244.10 | 3,800,000.00 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **4,952,244.10** | **4,824,000.00** |
| **காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு** | | **(9,422,699.62)** | **1,505,320.64** |
| காலப்பகுதியின் ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | **15,613,666.58** | **14,108,345.94** |
| **காலப்பகுதியின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | **13** | **6,190,966.96** | **15,613,666.58** |

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று

ரூபா

| | மூலதனக் கொடை | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| **2021 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **53,832,010.65** | **722,241.10** | **(14,800,161.03)** | **39,754,090.72** |
| **விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | (844,641.71) | (844,641.71) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (426,500.31) | 33,316,393.55 | 866,446.07 | 33,756,339.31 |
| **2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **53,405,510.34** | **34,038,634.65** | **(14,778,356.67)** | **72,665,788.32** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீராக்கல் செய்தல் | (9,835,710.87) | - | (24,625,097.05) | (34,460,807.92) |
| **2022 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **43,569,799.47** | **34,038,634.65** | **(39,403,453.72)** | **38,204,980.40** |
| **விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | (10,458,527.42) | (10,458,527.42) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (1,612,694.67) | 33,316,393.55 | (2,521,457.51) | 29,182,241.37 |
| **2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **41,957,104.80** | **166,669,981.25** | **(52,383,438.65)** | **156,243,647.40** |

**நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்** **ரூபா.** **ரூபா.**

| **குறிப்பு 1 ஏ** | **2022** | **2021** |
|---|---|---|
| **மீண்டுவரும் கொடைகள் - ஏனைய கொடை முகவர்கள்** | | |
| **மக்கள் வங்கி** | 36,612.00 | 552,975.00 |
| சுனாமி அனுசரனை வருமானம் (டெய்லி மிரர்) | 400,000.00 | - |
| **மொத்தம்** | **436,612.00** | **552,975.00** |

| | **ரூபா.** | **ரூபா.** |
|---|---|---|
| **குறிப்பு 1 பீ** | **2022** | **2021** |
| **ஏனைய வருமானங்கள்** | | |
| அமைச்சினால் மீளளிக்கப்பட்ட வருமானம் | 3,607,000.00 | 3,911,784.75 |
| வட்டி வருமானம், | 471,182.88 | 258,578.87 |
| இடர்கடன் வட்டி | 15,911.47 | 4,448.68 |
| வேறு வருமானம் | 806,542.84 | 707,047.29 |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் | 12,945,982.92 | 12,424,257.24 |
| நன்கொடைகள் | 290,040.75 | - |
| நிலையான சொத்துக்கள் அகற்றல் | 263,176.01 | - |
| **மொத்தம்** | **18,399,836.87** | **17,306,116.83** |

| | **ரூபா.** | **ரூபா.** |
|---|---|---|
| **குறிப்பு 1 பீ (1)** | **2022** | **2021** |
| **அமைச்சினால் மீளளிக்கப்பட்ட வருமானத்தின் கூறுகள்** | | |
| சமூகப் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டம் | 2,782,000.00 | 3,911,784.75 |
| 24 மணி நேர இலவச தொலைபேசி உதவிச் சேவை செயற்பாட்டுத் திட்டம் | 825,000.00 | - |
| **மொத்தம்** | **3,607,000.00** | **3,911,784.75** |

| | **ரூபா.** | **ரூபா.** |
|---|---|---|
| **குறிப்பு 1சீ** | **2022** | **2021** |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெற்றவை | | |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடைகள் | 202,943.76 | 18,380.00 |
| **மொத்தம்** | **202,943.76** | **18,380.00** |

**ரூபா.**

| குறிப்பு 2.2 | ரூபா. 2022 | ரூபா. 2021 |
|---|---|---|
| **போக்குவரத்து செலவுகள்** | | |
| போக்குவரத்து மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு - மாவட்ட உத்தியோகத்தர் | 3,443,212.27 | 2,716,432.30 |
| அலுவலக உத்தியோகத்தர்கள் | 69,175.00 | 122,374.50 |
| வாகனக் கூலி | 364,897.18 | 318,087.46 |
| வெளிநாட்டு பயணச்செலவுகள் | 182,928.00 | - |
| போக்குவரத்து | - | 18,150.00 |
| **மொத்தம்** | **4,060,212.45** | **3,175,044.26** |

**குறிப்பு 2 - நிர்வாகச் செலவுகள்**

| குறிப்பு 2.1 | ரூபா. 2022 | 2021 |
|---|---|---|
| **சம்பளம் மற்றும் படிகள்** | | |
| ஊழியர் சம்பளங்கள் | 150,370,123.67 | 143,995,583.53 |
| ஊ. சே. நி | 21,946,994.27 | 21,009,553.80 |
| ஊ. ந. நி | 5,505,663.97 | 5,252,388.52 |
| மாதாந்த கொடுப்பனவு | 24,313,244.51 | 3,022,669.16 |
| விசேட கொடுப்பனவு | 34,507.60 | 33,938.00 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 2,122,907.24 | 2,805,415.09 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 92,519.25 | 201,051.75 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | 31,660,927.39 | 30,986,155.09 |
| பணிக்கொடை பங்களிப்பு | 8,431,387.50 | 7,889,925.00 |
| பதில் கடமை கொடுப்பனவு | 4,911,951.87 | 4,814,652.01 |
| தொழில் பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு | 1,357,750.00 | 610,000.00 |
| எரிபொருள் மற்றும் வாகன கொடுப்பனவு | 9,354,746.29 | 5,951,581.60 |
| **மொத்தம்** | **260,102,723.56** | **226,572,913.55** |

**குறிப்பு 3 - ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்**

| **குறிப்பு 3.1** | **ரூபா. 2022** | **ரூபா. 2021** |
|---|---|---|
| **வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள்** | | |
| காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | 2,736,262.52 | 2,459,401.75 |
| மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான காகிதாதிகள் | 1,312,454.16 | 1,324,452.82 |
| செய்தித் தாள்கள் | 218,710.00 | 66,540.00 |
| எரிபொருள் | 1,806,634.91 | 852,024.53 |
| **மொத்தம்** | **6,074,061.59** | **4,702,419.10** |

| **குறிப்பு 3.2** | **ரூபா. 2022** | **ரூபா. 2021** |
|---|---|---|
| **பராமரிப்புச் செலவுகள்** | | |
| மோட்டார் வாகனங்கள் | 1,394,411.68 | 1,730,018.53 |
| கணனி மற்றும் உபகரணங்கள் | 1,402,143.27 | 934,137.41 |
| கட்டிடம் மற்றும் அலுவலகம் | 549,073.00 | 399,520.77 |
| **மொத்தம்** | **3,345,627.95** | **3,063,676.71** |

| **குறிப்பு 3.3** | **ரூபா. 2022** | **ரூபா. 2021** |
|---|---|---|
| **ஒப்பந்த சேவைகள்** | | |
| தொலைபேசி | 5,204,289.21 | 5,572,625.93 |
| முத்திரை மற்றும் தபால் | 401,940.00 | 410,430.00 |
| மின்சாரம் | 2,682,785.18 | 2,329,186.35 |
| நீர் | 252,955.92 | 195,226.35 |
| காப்புறுதி | 707,939.48 | 689,258.83 |
| பாதுகாப்பு சேவை | 3,444,924.83 | 3,237,991.81 |
| சுத்தப்படுத்தும் சேவை | 1,641,179.00 | 1,603,082.50 |
| விளம்பரங்கள் | - | 395,118.00 |
| அச்சிடுதல் | 275,988.00 | 1,080.00 |
| மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | 1,112.50 | 34,912.50 |

| | | |
|---|---|---|
| விகிதங்கள் மற்றும் வரிகள் | 105,454.38 | 81,699.38 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 450,000.00 | 414,000.00 |
| பணிப்பாளர்சபை செலவீனங்கள் | 639,348.00 | 693,068.00 |
| நேர்காணல் குழு செலவீனங்கள் | 123,800.00 | 106,244.00 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 105,128.00 | 99,603.00 |
| இணையத்தள பராமரிப்பு | 418,378.60 | 442,987.59 |
| சேவை உடன்படிக்கைகள் - கணனி மற்றும் ஏனையவை | 501,354.23 | 400,933.41 |
| 1929 உணவுக் கொடுப்பனவு | 215,400.00 | 110,800.00 |
| **மொத்தம்** | **17,171,977.33** | **16,818,247.65** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 3.4** | **2022** | **2021** |
| **தேய்மானம் / கடன் தீர்ப்பு** | | |
| குத்தகைக் காணி | 779,041.10 | 779,041.10 |
| கட்டிடம் | 1,050,872.85 | 1,050,872.85 |
| மோட்டார் வாகனங்கள் | 4,844,500.00 | 4,354,083.00 |
| தளபாடம் | 1,549,539.13 | 2,058,872.29 |
| உபகரணங்கள் | 3,186,178.87 | 3,077,477.37 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - தளபாடம் | 2,750.00 | - |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் - உபகரணங்கள் | 267,399.79 | - |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - மோட்டார் வாகனங்கள் | 660,300.00 | 745,700.00 |
| - உபகரணங்கள் | 374,004.18 | 124,063.63 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனங்கள் | 211,300.00 | 211,300.00 |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 20,097.00 | 20,097.00 |
| **மொத்தம்** | **12,945,982.92** | **12,424,257.24** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 3.5** | **2022** | **2021** |
| **ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்** | | |
| இதர செலவீனங்கள் | 245,187.10 | 32,898.00 |

| | | |
|---|---|---|
| தவிசாளர் உபசரிப்புச் செலவு | 535,181.89 | 643,778.00 |
| **மொத்தம்** | **780,368.99** | **676,676.00** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 3.6** | **2022** | **2021** |
| **NPA – செலவுகளை செயற்படுத்தல்** | | |
| தேசிய கொள்கையை செயற்படுத்துதல் மற்றும் தரவுத்தளத்தை பராமரித்தல். | 1,626,153.13 | 760,457.06 |
| குழந்தையின் சிறந்த நலனைப் பாதுகாத்தல். | 8,161,261.53 | 8,698,602.71 |
| சிறுவர் பராமரிப்பு சேவையை கண்காணித்தல், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல, தொடர்ந்த கண்காணித்தல். | 8,960,902.59 | 4,061,926.09 |
| முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 2,142,984.20 | 3,810,699.05 |
| சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல். | 61,825.75 | 50,180.50 |
| சுனாமி பேரிடர் நிவாரணத் திட்டம். | 1,088,037.20 | 1,566,008.00 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பட்டறைகள், கலந்தரையாடல்கள் மற்றும் பல | 1,681,749.50 | 1,119,748.37 |
| திறன் அபிவிருத்தி, பராமரிப்பு நடவடிக்கை | 2,454,751.50 | 638,117.50 |
| NCPA சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு | 825,000.00 | 3,911,784.75 |
| 24 மணிநேர சிறுவர் உதவித் தொலைபேசி அழைப்பக்கான செயல்திட்டம். | 2,782,000.00 | - |
| **மொத்தம்** | **29,784,665.40** | **24,617,524.03** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 4** | **2022** | **2021** |
| நிகழ்ச்சித் திட்ட செலவுகள் | | |
| சிதுவிலி சித்தம் செலவுகள் 2021 | 36,612.00 | 552,975.00 |
| சுனாமி அனுசரணைச் செலவுகள் டெய்லி மிர்ர் | 400,000.00 | - |
| **மொத்தம்** | **436,612.00** | **552,975.00** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 5** | **2022** | **2021** |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய செலவுகள் | - | - |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய கொடுப்பனவுகள் | | |
| **மொத்தம்** | **-** | **-** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 6** | **2022** | **2021** |
| நிதி செலவு | | |
| வங்கிக் கட்டணங்கள் | - | - |
| **மொத்தம்** | **-** | **-** |

| **குறிப்பு 7** | **2022** | **2021** |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) – திறைசேரி | (10,458,527.42) | (844,641.71) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) - நிகழ்ச்சித் திட்டம் | - | - |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) - தே.சி.பா.நிதி | 202,943.76 | 18,380.00 |
| **மொத்தம்** | **(10,255,583.66)** | **(826,261.71)** |

| குறிப்பு 8 | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| **ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்** | **1/1/2022 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை** | **கூட்டல்** | **அகற்றல்** | **முந்தைய ஆண்டு சீராக்கம்** | **31/12/2022 இல் உள்ளவாறான இறுதி நிலுவை** |
| **செலவு/மதிப்பீடு** | | | | | |
| **தே.சி.பா.அ** | | | | | |
| கட்டிடம் | 52,543,643.30 | 136,375,875.00 | (52,543,643.30) | - | 136,375,875.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | - | - | - | 48,445,000.00 |
| தளபாடம் | 16,592,401.88 | 1,252,406.30 | (179,498.31) | - | 17,665,309.87 |
| உபகரணங்கள் | 58,245,310.48 | 3,864,370.00 | (282,350.99) | | 61,827,329.49 |
| | **175,826,355.66** | **141,492,651.30** | **(53,005,492.60)** | **-** | **264,313,514.36** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 501,446.00 | - | - | - | 501,446.00 |
| ILO சிறுவர் கடத்தல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 754,701.00 | - | - | - | 754,701.00 |
| ILO ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 6,969.00 | - | - | - | 6,969.00 |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | - | - | - | 2,232,158.65 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 1,035,193.00 | - | - | - | 1,035,193.00 |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 96,275.00 | - | - | - | 96,275.00 |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் – கணனி | 2,121,560.00 | - | (1,042,377.11) | - | 1,079,182.89 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - தளபாடம் | 79,147.50 | - | - | - | 79,147.50 |
| - உபகரணங்கள் | 85,757.00 | - | - | - | 85,757.00 |
| யு.என்.டி.பி தளபாடம் | | | | | |
| - தளபாடம் | 33,112.80 | - | - | - | 33,112.80 |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | - | - | - | 1,782,665.28 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | - | - | - | 8,378,609.00 |
| - உபகரணங்கள் | 8,549,634.68 | 2,663,600.00 | (184,990.00) | - | 11,028,244.68 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 2,113,000.00 | - | - | - | 2,113,000.00 |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | - | - | - | 133,980.00 |
| | **27,904,208.91** | **2,663,600.00** | **(1,227,367.11)** | **-** | **29,340,441.80** |
| **மொத்தம்** | **203,730,564.57** | **144,156,251.30** | **(54,232,859.71)** | **-** | **293,653,956.16** |

| குறிப்பு 8 தொடர்... | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| **தேய்மானம்** | **1/1/2022 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை** | **2022 ஆம் ஆண்டுக்கான தேய்மானம்** | **அகற்றல்** | **முந்தைய ஆண்டு சீராக்கம்** | **31/12/2022 இல் உள்ளவாறான இறுதி நிலுவை** |
| **தே.சி.பா.அ** | | | | | |
| கட்டிடம் | 16,360,405.07 | 1,050,872.85 | (17,411,277.92) | | - |
| மோட்டார் வாகனங்கள் | 13,639,980.20 | 4,844,500.00 | (1,979,314.20) | | 16,505,166.00 |
| தளபாடம் | 13,184,253.49 | 1,549,539.13 | (170,336.54) | | 14,563,456.08 |
| உபகரணங்கள் | 49,034,058.62 | 3,186,178.87 | (277,350.99) | | 51,942,886.50 |
| | **92,218,697.38** | **10,631,090.85** | **(19,838,279.65)** | | **83,011,508.58** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | - | - | - | 501,446.00 |
| ILO இனது கடத்தல் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 754,701.00 | - | - | - | 754,701.00 |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 6,969.00 | - | - | - | 6,969.00 |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | - | - | - | 2,232,158.65 |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 1,035,193.00 | - | - | - | 1,035,193.00 |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 96,275.00 | - | - | - | 96,275.00 |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் – கணனி | 2,121,560.00 | - | (1,042,377.11) | - | 1,079,182.89 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - தளபாடம் | 79,147.50 | - | - | - | 79,147.50 |
| - உபகரணங்கள் | 81,007.00 | 2,750.00 | - | - | 83,757.00 |
| யு.என்.டி.பி தளபாடம் | | | | | |
| - தளபாடம் | 33,112.80 | - | - | - | 33,112.80 |
| - உபகரணங்கள் | - | 267,399.79 | - | - | 267,399.79 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 2,367,309.00 | 660,300.00 | - | - | 3,027,609.00 |
| - உபகரணங்கள் | 8,342,861.95 | 374,004.18 | (184,990.00) | - | 8,531,876.13 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 1,901,700.00 | 211,300.00 | - | - | 2,113,000.00 |
| சேவ் த சில்ரன் – உபகரணங்கள் | 31,737.89 | 20,097.00 | - | - | 51,834.89 |
| | **19,585,178.79** | **1,535,850.97** | **(1,227,367.11)** | **-** | **19,893,662.65** |
| **மொத்தம்** | **111,803,876.17** | **12,166,941.82** | **(21,065,646.76)** | **-** | **102,905,171.23** |

| குறிப்பு 8 தொடர்... | | | ரூபா. |
|---|---|---|---|
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | **கிரயம்** | **திரட்டப்பட்ட தேய்மானம்** | **தேறிய ஏட்டுப் பெறுமதி** |
| **தே.சி.பா.அ** | | | |
| கட்டிடம் | 136,375,875.00 | - | 136,375,875.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | 16,505,166.00 | 31,939,834.00 |
| தளபாடம் | 17,665,309.87 | 14,563,456.08 | 3,101,853.79 |
| உபகரணங்கள் | 61,827,329.49 | 51,942,886.50 | 9,884,442.99 |
| | **264,313,514.36** | **83,011,508.58** | **181,302,005.78** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | 501,446.00 | - |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 754,701.00 | 754,701.00 | - |
| சட்ட விரோதம் தொடர்பான ILO நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 6,969.00 | 6,969.00 | - |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | 2,232,158.65 | - |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 1,035,193.00 | 1,035,193.00 | - |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 96,275.00 | 96,275.00 | - |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் - கணனி | 1,079,182.89 | 1,079,182.89 | - |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 79,147.50 | 79,147.50 | - |
| - உபகரணங்கள் | 85,757.00 | 83,757.00 | 2,000.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் | | | |

| | | | |
|---|---|---|---|
| - தளபாடம் | 33,112.80 | 33,112.80 | - |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | 267,399.79 | 1,515,265.49 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | 3,027,609.00 | 5,351,000.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | 8,531,876.13 | 2,496,368.55 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 2,113,000.00 | 2,113,000.00 | - |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | 51,834.89 | 82,145.11 |
| | **29,340,441.80** | **19,893,662.65** | **9,446,779.15** |
| **மொத்தம்** | **293,653,956.16** | **102,905,171.23** | **190,748,784.93** |

| **குறிப்பு 8.1** | | | | | | **ரூபா.** |
|---|---|---|---|---|---|---|
| **குத்தகை காணி** | **குத்தகை காலம்** (வருடங்கள்) | **குத்தகைக் கிரயம்** | **கடந்த வருடம் வரைக்குமான திரட்டப்பட்ட கடன் தீர்ப்பு** | **ஆரம்ப நிலுவை** | **2022ஆம் ஆண்டுக்கான கடன் தீர்ப்பு** | **முன் கொண்டு செல்லப்படும் நிலுவை** |
| குத்தகை காணி (2000) | 50 | 8,422,459.89 | 3,705,882.36 | 4,716,577.53 | 168,449.20 | **4,548,128.33** |
| குத்தகை காணி (2016) | 30 | 18,317,757.08 | 3,663,551.40 | 14,654,205.68 | 610,591.90 | **14,043,613.78** |
| | | **26,740,216.97** | **7,369,433.76** | **19,370,783.21** | **779,041.10** | **18,591,742.11** |

| குறிப்பு 9 | ரூபா. 2022 | ரூபா. 2021 |
|---|---|---|
| **முதலீடுகளும் சேமிப்புகளும்** | | |
| பணிக்கொடை நிதி முதலீட்டுக் கணக்கு - 261605 | 231,037.56 | 1,743,758.92 |
| சுனாமி சேமிப்புக் கணக்கு - 679016 | 62,393.29 | 60,551.64 |
| இடர்கடன் சேமிப்பக் கணக்கு - 89945554 | 238,066.39 | - |
| **மொத்தம்** | **531,497.24** | **1,804,310.56** |

| குறிப்பு 10 | ரூபா. 2022 | ரூபா. 2021 |
|---|---|---|
| **நீண்ட காலமாக பெறத்தக்கவையாக உள்ளவை** | | |
| இடர்கடன் | 1,969,607.45 | - |
| **மொத்தம்** | **1,969,607.45** | **-** |

| குறிப்பு 11 | ரூபா. 2022 | ரூபா. 2021 |
|---|---|---|
| **பெறத்தக்க கணக்குகள்** | | |
| உளவியல் சமூக நிகழ்ச்சி - யுனிசெப் | | - |
| பண்டிகை முற்பணம் | 156,750.00 | 261,000.00 |
| காசு முற்பணம் | 2,103,641.19 | 3,391,812.58 |
| பெறத்தக்க கணக்குகள் | 186,371.63 | 513,477.64 |
| பெறத்தக்க இடர் கடன்கள் | 461,908.21 | 58,676.81 |
| நிலையான வைப்பு | 7,501,169.21 | 4,823,581.61 |
| சேவ் த சில்ரன் இடமிருந்து மீளப் பெறக் கூடியது | 16,943.01 | - |
| **மொத்தம்** | **10,426,783.25** | **9,048,548.64** |

| குறிப்பு 12 | ரூபா. 2022 | ரூபா. 2021 |
|---|---|---|
| **முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள்** | | |
| காப்புறுதி | 366,228.37 | 377,054.29 |
| சேவை உடன்படிக்கை | 274,575.52 | 166,008.66 |
| **மொத்தம்** | **640,803.89** | **543,062.95** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 13** | **2022** | **2021** |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு 228076 | 4,806,172.21 | 11,852,259.83 |
| - நடைமுறைக் கணக்கு 71252941 | 843,270.01 | 2,843,882.01 |
| மக்கள் வங்கி - நடைமுறைக் கணக்கு 174-1-001-4-0347385 | 541,524.74 | 917,524.74 |
| **மொத்தம்** | **6,190,966.96** | **15,613,666.58** |

குறிப்பு -14 A

நிகழ்ச்சித்திட்ட நிதி இருப்பு விபரம்

Rs.

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | 2022 | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | | நிதி/ கிடைப்பனவு | செலவுகள் | |
| சுனாமி அனுசரணை (டெய்லி மிரர்) | | | | | |
| சிறுவர் நிதியம் | 504,300.53 | - | - | - | 504,300.53 |
| மக்கள் வங்கி - சிதுவிலி சித்தம் | 447,025.00 | - | - | (36,612.00) | 410,413.00 |
| **மொத்தம்** | **1,868,850.27** | **-** | **24,000.00** | **(436,612.00)** | **1,456,238.27** |

குறிப்பு -14 B

சி.பா.அ. ச. நிதி - கணக்கு சாராம்சம்

Rs.

| நிதியின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | கிடைப்பனவுகள் (குறிப்பு 1சீ) | செலவுகள் (குறிப்பு 12) | 2020 ஆம் ஆண்டுக்காக தேறிய மிகை / பற்றாக்குறை | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| சி.பா.அ. ச. நிதி | 603,377.27 | 1,289,179.21 | 202,943.76 | - | 202,943.76 | 2,095,500.24 |

| **குறிப்பு 15** | ரூபா.<br>**2022** | ரூபா.<br>**2021** |
|---|---:|---:|
| ***திரட்டப்பட்ட செலவுகள்*** | | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 171,037.06 | 325,952.98 |
| பாதுகாப்பு சேவை | 297,122.96 | 307,336.31 |
| சுத்தப்படுத்தும் சேவை | 141,060.00 | 148,041.25 |
| போக்குவரத்து மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு | 810,704.38 | 1,018,200.00 |
| மின்சாரம் | 233,846.50 | 234,531.80 |
| நீர் | 4,628.93 | 2,448.24 |
| காகிதாதிகள் | 48,250.00 | 50,000.00 |
| சி.பா.நிதியத்தின் பிரதான கணக்கு | 16,943.01 | - |
| தொலைபேசி கட்டணங்கள் | 437,604.73 | 566,288.36 |
| வேறு கடன் வழங்குனர் | 577,400.00 | 209,922.39 |
| இணையத்தள பராமரிப்பு | 26,214.24 | 41,249.24 |
| செய்தித் தாள் கொள்வனவு | 28,100.00 | 13,190.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | - | 8,029.50 |
| தொழில் பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு | 72,500.00 | 73,500.00 |
| செலுத்தவேண்டிய சம்பளம் | - | 148,059.68 |
| **மொத்தம்** | **2,865,411.81** | **3,146,749.75** |

| **குறிப்பு 16** | ரூபா.<br>**2022** | ரூபா.<br>**2021** |
|---|---:|---:|
| **குறுங்கால ஒதுக்கீடு** | | |
| கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு | 450,000.00 | 798,000.00 |
| இடர் கடன் மீள் செலுத்துகைக்கான ஒதுக்கீடு | - | 470,734.14 |
| குறுங்கால பணிக்கொடை நிதிய ஒதுக்கீடு | 816,153.50 | 800,791.00 |
| **மொத்தம்** | **1,266,153.50** | **2,069,525.14** |

ரூபா.

| குறிப்பு 17 | 1/1/2022 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | 2022 ஆம் ஆண்டுக்கான வருமானங்கள் | 2022 ஆம் ஆண்டுக்கான செலவுகள் | முந்தைய ஆண்டு சீராக்கம் | 31/12/2022 இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு மூலதனம்** | | | | | |
| **மூலதன மானியம்** | | | | | |
| அரச மானியங்கள் - மூலதனம் | 20,074,604.87 | 1,392,744.10 | (6,084,482.52) | 15,699.18 | 15,398,565.63 |
| பிரித்தானிய உயர் ஸ்தானிகம் - கட்டிடம் | 10,163,413.80 | | (338,780.46) | (9,824,633.34) | - |
| யுனிசெப் - மானியம் | 433,572.73 | 2,663,600.00 | (430,704.18) | - | 2,666,468.55 |
| ஜீஜ இஸட் – மானியம் | 211,300.00 | | (211,300.00) | - | - |
| மூலதன மானியம் - யு.என்.டி.பி | 1,782,665.28 | | (267,399.79) | - | 1,515,265.49 |
| வாங்கிய சொத்து கையகப்படுத்தல்/ அபிவிருத்தி நடவடிக்கை | 13,202.00 | | (4,950.75) | - | 8,251.25 |
| மூலதன மானியம் - குத்தகை காணி | 14,654,205.67 | | (610,591.90) | - | 14,043,613.77 |
| மூலதன மானியம் - சேவ் த சில்ரன் | 102,242.11 | | (20,097.00) | - | 82,145.11 |
| அமைச்சினது மானியம் ( மூலதன கையகப்படுத்தல்) | 226,136.88 | 3,535,500.00 | (626,232.17) | (26,776.71) | 3,108,628.00 |
| ஜனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டமோட்டார் வாகனம் | 5,744,167.00 | - | (610,000.00) | - | 5,134,167.00 |
| **மொத்தம்** | **53,405,510.34** | **7,591,844.10** | **(9,204,538.77)** | **(9,835,710.87)** | **41,957,104.80** |

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. VOT/B/NCPA/01/2022/10 திகதி : 2023 மே மாதம் 31 ஆம் திகதி

தவிசாளர்,

தேசிய சிறுவர் பாதுபாப்பு அதிகாரசபை.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படையாக விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வு ஆண்டில் அரசாங்க மூலதனக் கொடையாக கிடைத்திருந்த ரூபா 32,420,000 ஆன தொகை இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 11 இற்கமைய நிதிக் கூற்றுக்களில் இனங்காண்பதற்கு மற்றும் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டில் அலுமினியம் கப்பட் பொருத்துவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,481,639, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக அறவீட்டுச் செலவினமாக இலாபத்திற்கு எதிராக பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளதனால் நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அத்தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் வெளிபப்டுத்தப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு மீள்மதிப்பீட்டு கூட்டுக் கணக்கின் மீதி ரூபா 135,279,060 ஆக இருத்தல் வேண்டுமாயினும், மூலதனக் கொடை ரூபா 35,132,366 மற்றும் தேய்மானம் ரூபா 3,741,444 மீள்மதிப்பீட்டுக் கூட்டுக் கணக்கிற்கு தவறுதலாக முறையே செலவு மற்றும் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மீள்மதிப்பீட்டுக் கூட்டுக் கணக்கின் நிலுவை ரூபா 31,390,922 இனால் குறைவாக காட்டப்பட்டுள்ளது. அத்தவறு காரணமாக மூலதன கொடைக் கணக்கு ரூபா 35,132,366 குறைவாக மற்றும் தொங்கல் வருமானக் கணக்கு ரூபா 3,741,444 இனால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலாபத்தில் ரூபா 1,289,179 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிதிக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ள போதிலும் மேற்படி தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டு முதல் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள கணக்காளர் 2022 ஆம் ஆண்டு மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டதன் காரணமாக அவருக்கு நிலுவைச் சம்பளமாக ரூபா 8,781,059 ஆன தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், அதற்கான ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்படி செலுத்த வேண்டிய நிலுவை தொகையில் மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 4,027,143 ஆன தொகை தடுத்து வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வு ஆண்டில் செலவினமொன்றாக சீராக்கல் செய்யப்பட்டுள்ளதனால் ஆண்டின் குறை மேற்படி தொகையினால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே தொடர்ந்தும் செலுத்த வேண்டியுள்ள ரூபா 4,753,916 ஆன நிலுவை சம்பளம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கு அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும், உகந்ததும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 அதிகாரசபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்பத்துவதில்லை என்பதுடன் நான் அது பற்றி எவ்வகையிலும் சான்றுப்படுத்துவதோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக இருப்பது ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாகக் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பொருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் நான் மேற்கொண்டுள்ள பணிகளின் அடிப்படையில், குறித்த ஏனைய தகவல்கள் அதன் போதியளவில் தவறான வெளிப்படுத்தல் இருப்பதாக நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில், மேற்படி விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்களாவன, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக

காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

**2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள் விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| | **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | 2021 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்டுள்ள காணாமற் போன மடிக் கணினி தொடர்பாக நிதிப் பிரமாணத்துக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | யாதாயினுமொரு விசேட பணிக்காக பதவிநிலை அலுவலர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன உச்சளவு வரை குறித்த பணிக்கென இடைக்கா கட்டுநிதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமாயினும், மேற்படி வரையையறையும் விஞ்சியதாக 06 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 941,900 ஆன முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 | வெளியிடப்பட்ட கட்டுநிதியை தீர்ப்பதற்காக அது வழங்கப்பட்ட நிதி ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மேல் தாமதப்படுத்தப்படக் கூடாது எனினும், 2022 ஆம் ஆண்டில் 107 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 2,103,641 ஆன முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

| | **தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகள்** | **அவதானிப்பு** |
|---|---|---|
| | 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் | |

| | | |
|---|---|---|
| (i) | சட்டத்தின் 14 (அ), (ஆ), (இ), (ஊ) பிரிவுகள் | 2019 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான ஐந்து வருட செயற்றிட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள மீளாய்வு ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | சட்டத்தின் 14 (ஐ) பிரிவு | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2022 சனவரி 01 முதல் 2022 டிசம்பர் 31 வரை கிடைத்துள்ள முறைப்பாடுகளில் 10,691, அதாவது 47 சதவீதமானவை தீர்க்கப்படாத முறைப்பாடுகளாக காணப்பட்டதுடன், விசாரணைப் பிரிவு, உளவியல் சமூக பிரிவு மற்றும் சட்டப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவை தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வந்தன. மீளாய்வு ஆண்டில் துர்நடத்தை மற்றும் துன்புறுத்தல் பற்றிய 10,497 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், மேற்படி துர்நடத்தைகளின் முறைப்பாடுகளில் 6731 தொடர்பாக மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் இறுதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

### 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வாய்மூலம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு உரித்தான கட்டிடம் அறிக்கைத் திகதி வரையும் எந்தவொரு பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாது செயற்படாத நிலையில் காணப்பட்டு வந்ததுடன், மேற்படி கட்டிடத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வு ஆண்டில் மாத்திரம் ரூபா 865,680 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு 30 வருட குத்தகை காலத்திற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அருகே அமைந்துள்ள காணி ரூ. 18,317,757 ஆன பெறுமதிக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக்காணி இதுவரை எந்தவொரு பணிக்கும் பயன்படுத்தப்படாது பயனற்றதாக காணப்பட்டது.

(இ) 2022 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட

முற்பணங்களில் கூட்டுத்தொகை ரூபா 1,789,090 அதாவது 54 சதவீதம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஈ) சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணிக்காக மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ள போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் நிதியானது குறித்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக செலவிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதி வரை நிதியத்தில் ரூபா 2,905,500 ஆன மீதி காணப்பட்டது.

(உ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 618 ஆயினும், இதில் அலுவலர்கள் 287 பேர் அதாவது 46 சதவீதமான பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டன. இதில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மிக முக்கியமான செயற்பணியை நிறைவேற்றுகின்ற பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் 148 பேருக்கான வெற்றிடங்கள் 2021 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்றன. அதற்கமைய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பாரியளவு மனிதவளப் பற்றாக்குறை காணப்படுவதானது அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதில் தடையாக அமைந்துள்ளது.

(ஊ) 2016 ஆம் ஆண்டு ரூ.மி. 1.2 செலவிடப்பட்டு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் ப்றறி தயார் செய்யப்பட்ட தரவு முறைமையை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது. எனவே, 2021 ஆம் ஆண்டு புதிய தேசிய தரவு முறைமையை தயார் செய்வதற்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மொத்த செலவினம் ரூபா 1,403,255 ஆகும். இதன் காரணமாக பழைய தரவு முறைமைக்கு செலவிடப்பட்ட ரூ.மி. 1.2 ஆன தொகை பயனற்ற செலவினமாக மாறியிருந்தது.

(எ) ஓரங்கட்டப்பட்ட, அபாயகரமான, அச்சுறுத்தலுக்கு ஆளாகக்கூடிய மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவி அல்லது உரிய உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காக சிறுவர்கள் 1000 பேரை இலக்காகக் கொண்டு மீளாய்வு ஆண்டில் ரூபா 4,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சிறுவர்கள் 417 பேருக்கு ரூபா ரூபா 1,514,000 ஆன தொகை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**கையொப்பம் / டபிள்யு. பீ.சி. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.